

**வாரந்தோறும் ஒரு தீபம்!**

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம்119:105)**

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

(வியாழன்தோறும்)

| 05.09.2019 | 9. தனி ஜெபமின்றி, ஜெயவாழ்வு இல்லை! |
|---|---|



**த**ன் ஆத்துமா கலங்கிய வேளையில், தன் சீஷர்களோடு ஜெபித்திட இயேசு கெத்சமனே சென்ற போதிலும் **கல்லெறி தூரம் விலகி, தனித்தே ஜெபித்தார்.** தன் பிதாவை சந்தித்து, சுய சித்தம் ஒழித்து.... கெம்பீரமாய் கொல்கொதா மலையேறி வெற்றி சிறந்தார்! (லூக்கா 22:41,42).

தனிமையில், தேவனை ஜெபத்தில் சந்திக்காத கிறிஸ்தவ வாழ்வில் ஜெயம் இருப்பதில்லை. "**இவ்வகை பிசாசு** ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி வேறு எவ்விதத்தினாலும் புறப்பட்டு போகாது" என்றார் இயேசு (மத்தேயு 17:21). மிகுதியான நளத தைலத்தை சில செத்த ஈக்கள் நாறச் செய்துவிடும் (பிர.10:1). மேலும் "இதோ உலகத்தின் அதிபதி வருகிறான். **அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை**" என இயேசு கூறினார்! (யோவான் 14:30).

ஆகவே, உங்கள் ஜீவியத்தில் **ஒரு பாவம் ஜெயிக்கப்படாமல்** இருந்தாலும், அது தோல்வியின் ஜீவியம் என்பதை மறந்து விடாதீர்கள். பாவத்தை ஜெயித்து வாழாமல், தெய்வ கிருபையின் ஆளுகையில் இருப்பதை நாம் நிரூபித்திட முடியாது. **முற்றிலும் ஜெயம்** என்பதே பரலோக ராஜ்ஜியத்தின் நிரந்தர தரமாகும் (ரோ.8:37). ஆகவே இயேசு தனிமையில், பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் ஜெபித்திட்ட ஜீவியம் நமக்கு இராவிட்டால் ஜெய வாழ்வு இல்லை! அதை அறிந்து, ஜெபமாந்தர்கள் நிறைந்த சபையாய் நாம் திகழ்வோமாக!

**– ரத்னம்**